அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்

(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)

ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief

Dr PRIYAKRISHNAN

Publisher

MR P. JAYAKRISHNAN

Editorial Board Members

Dr V SELVAKUMAR

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Sillalee A/L S.Kandasamy

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்

இருளில் முளைத்த மிருகம் சிறுகதை - ஓர் பார்வை

Irulil Mulaitha Mirugam (Short Story) - An Overview

Dr.E.chitra, *Assistant Professor, Department of Tamil, Nazareth Arts and Science College, Kovil Pathagai.*

முனைவர் ஏ.சித்ரா, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, நாசரேத் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவில் பதாகை

Abstract:

"*Irulil Mulaittha Mirugam*" *(The Beast Born in Darkness) is a collection of Dalit short stories by the writer Yaakkan. The title story realistically portrays how oppressed people in the southern districts themselves secure justice in the face of caste-based atrocities committed against them. These stories center on the self-respect of the oppressed and their retaliatory response to caste-based oppression. The concluding sections of his poems and short stories serve to expose the central idea that Dalit liberation is possible only through the destruction of the ruling class.*

Keywords: *Self-respect, oppression, atrocity, exposure, justice, ruling class, real-life reality.*

ஆய்வுச் சுருக்கம்:

இருளில் முளைத்த மிருகம் என்பது எழுத்தாளர் யாக்கன் எழுதிய தலித் சிறுகதைத் தொகுப்பாகும். இத்தொகுப்புத் தலைப்பிலான கதையானது, தென்மாவட்டங்களில் ஒடுக்கப்பட்ட மக்களின் மீது நிகழ்த்தப்படும் சாதிய வன்கொடுமைகளுக்கு எதிராக அவர்களே எப்படி நீதியை நிலைநாட்டுகிறார்கள் என்பதை எதார்த்தமாகப் பேசுகிறது. இக்கதைகள் ஒடுக்கப்பட்ட மக்களின் சுயமரியாதையையும், சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிரான அவர்களின் பதிலடியையும் மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. ஆளும் வர்க்கத்தின் அழிவுகளில் இருந்து தான் தலித் விடுதலை சாத்தியப்படும் என்னும் மையக்கருத்தை அம்பலப்படுத்துவதாக இவருடைய கவிதை, சிறுகதை ஆகியவற்றின் இறுதிப் பகுதிகள் அமைந்துள்ளன.

திறவுச்சொற்கள்: சுயமரியாதை, ஒடுக்கு முறை, வன்கொடுமை, அம்பலம் படுத்துதல், நீதி, ஆளும் வர்க்கம், எதார்த்த வாழ்க்கை.

முன்னுரை:

சிறுகதை, நாவல் இவ்விரு இலக்கிய வகைகளும் பொதுவாக புனைக்கதைகள் என்று அமைக்கப்படுகின்றன. 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலே உலகின் முதல் சிறுகதை அமெரிக்காவில் தோன்றியது. அது வாசிங்டன் இர்விங் எழுதிய ரிப்வேன் லிங்கின் *(Rip Van Wimble)* என்பது உலகின்

முதல் சிறுகதை தொகுப்பு. 1819 முதல் உலகச் சிறுகதையையும் சேர்த்து வெளியிடப்பட்ட தி ஸ்கெட்சி புக் (The Sketch Book) என்பது உருசியாவில் 1923 முதல் சிறுகதை தோன்றியது.

"படிப்படியாக வளர்ந்த சிறுகதை, சிகாவில் என்பவர் படைப்பால் தரம் மிகு உயர்ந்தது. சிறுகதை படைப்புக்காக நோபல் பரிசு பெற்ற இவரைச் சிறுகதை உலகின் தந்தை எனப் போற்றுவர்".1

என்பது அறியதக்கது ஆகும்.

தமிழ் சிறுகதையின் தோற்றம்:

தமிழில் தோன்றிய மதன காமராசன் கதை, விக்ரமாதித்தன் கதை, பன்னிரண்டு மந்திரி கதை போல்வன வாய்மொழி கதையாகவே பல காலங்களாக வழங்கப்பட்டு வந்தாலும் அவை கட்டுக்கதைகளாகவும் மிகைக்கற்பனை கலந்தும் கூறப்பட்டு வந்த நிகழ்ச்சித் தொகுப்புகளாகவே காணப்படுகின்றன.

முதன் முதலாகத் தமிழ் மொழியில் நாம் காணும் கதைகள் இத்தாலி நாட்டைச் சார்ந்த கிறித்துவப் பாதிரியார் வீரமாமுனிவர் (1680-1747) எழுதிய பரமார்ந்த குரு கதையாகும். 19ஆம் நூற்றாண்டில் தாண்டவராய முதலியாரின் பஞ்சதந்திரக் கதைகள் பெரிதும் வழக்கில் இருந்தது. வீராச்சாமிச் செட்டியார் இயற்றிய விநோதரச மஞ்சரி என்னும் நூலில் பல கதைகள் காணப்படுகின்றன. செல்வக் கேசவராயரின் அபிநயக்கதைகள் போன்றவை கதைத்தன்மை பெற்றிருப்பினும் பத்தாம் பசலித்தனமானவை. தேவையான செய்திகளையும் சொற்களையும் விடுத்து தேவையில்லாத செய்திகளும் சொற்களுமே மிகுந்திருந்தன. அவை யாவும் கதைகள் என்றே கூறப்படினும் இன்று நாம் காணும் சிறுகதைகள் போல் இல்லை. ஆனால் இன்றைய சிறுகதைகள் வளர இவை துணையாயின எனலாம்.

மேலைநாட்டாரின் சிறுகதைகளை ஒட்டி அந்த வகை இலக்கியம் தோன்றி வளர வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் வாவேசு ஐயர் ஆவார். சிறுகதையை,

"தமிழில் தொடங்கி வைத்த பெருமைக்குரியவர் வாசு ஐயர் 1881 1925 இவருடைய மங்கையர்கரசியின் காதல் என்ற தொகுப்பே முதல் சிறுகதை நூல் இதில் இடம் பெற்றுள்ள குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை என்பதை தமிழில் முதல் சிறுகதையாகும்."2

என்று கூறுகிறார் முனைவர் க.வாசுதேவன்.

சிறுகதையின் இலக்கணம்:

எட்கர் ஆலன்பூ என்ற அமெரிக்க ஆசிரியர் சிறுகதையின் இலக்கணமாக,

"சிறுகதை என்பது அரைமணியில் இருந்து இரண்டு மணி நேரத்துக்குள் படித்து முடிக்க கூடிய அளவு கொண்ட கதையாகும்"3

என்று குறிப்பிடுகிறார்.

“குதிரைப் பந்தயம் போன்று தொடக்கமும் முடிவும் சுவை மிக்கதாக இருத்தல் வேண்டும்”4

என்பார் செட்ஜ்விக்.

“என்ன ஒருமை உச்சகட்டம் முதல் தொடர்ச்சி முடிவு அமைப்பு ஆகிய மூன்றையும் அது தன் பால் கொண்டிருக்கும்”5

என்பார் புரூக் ஸ்வான்.

“சிறுகதை என்ற உடனே பெரிய கதையாக விளங்கும் புதினத்தின் சுருக்கம் என எண்ணிவிடல் கூடாது புதினம் புளியமரம் என்றால் சிறுகதை தென்னை மரம்”6

என்கிறார் இராசாசி. எழுதி வைத்த கதைகளுக்குப் பின்னேயும் உள்ள எழுதாத கதைகள் படிப்போரின் மனதில் விரிய வேண்டும் என்பார் அகிலன். உரைநடையில் எழுதப்பட்ட கவிதைகளே சிறுகதைகள் என்பார் ஜெயகாந்தன். இவ்வாறு பலரும் சிறுகதைக்கு இலக்கணம் தருவது நோக்கத்தக்கது.

முக்கிய தகவல்கள்:

ஆசிரியர்:

யாக்கன் (இவர் சிறந்த தலித் எழுத்தாளருக்கான தமிழ்நாடு அரசு விருதை வென்றவர்).

கதைக்களம்:

தென் தமிழகத்தில் தலித்துகள் எதிர்கொள்ளும் எதார்த்தமான சமூக அவலங்கள்.பின்னணி: அதிகார வர்க்கத்தினரால் செய்யப்படும் அநீதிகளுக்கு எதிராக எழும் கலகக் குரல்.

இத்தொகுப்பில் உள்ள அழிந்த காட்டு அலறல், கலகத்தின் சினைகள் போன்ற பிற கதைகளும் இதே கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டவை.

தலித் மக்களுக்காகவும், அவர்கள் வாழ்க்கையில் ஏற்படுகின்ற அவலங்களையும் எடுத்து காட்டுகின்ற காலக் கண்ணாடிகளாக பல கவிஞர்கள் கவிதைகள், கட்டுரைகள் என எழுதி அவர்களின் வாழ்க்கை செம்மைப்படுத்துவதற்காக உழைத்து வருகின்றனர்.

அந்த வரிசையில் தலித் மக்களுக்கு என தன் கட்டுரைகளிலும், கவிதைகளிலும், திறம்பட கருத்துக்களை எடுத்துக் கூறி வருகின்றார் கதை ஆசிரியர் யாக்கன் அவர்கள்.

இருளில் முளைத்த மிருகம் சிறுகதையின் சிறப்பு :

பெண்கள் எப்பொழுதும் தன்னம்பிக்கையுடன் இருப்பார்கள். அதே நம்பிக்கையுடன் தான் கரிக்காலியின் அம்மா தன் கணவன் குடித்துவிட்டு கூத்து அடித்தாலும் தானும் தன் மகளும் நன்றாக வாழ வேண்டும் என்ற ஏக்கத்தில் காடு, மலை, வெயில், மழை என்று பார்க்காமல் அலைந்து திரிந்து விறகு சுள்ளி பொறுக்கி தன்னுடைய மகள், கருக்காலியை காப்பாற்றி வந்தாள். என்ன செய்வது கருக்காலியை கடைசிவரை காப்பாற்ற முடியவில்லை. பாதியிலே போய் சேர்ந்து விட்டாள். கருக்காலி

மட்டும் அம்மாவிடம் கற்றுக் கொண்ட தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் வைத்துக் கொண்டு அம்மா விட்டுச் சென்ற பணிகளை செய்து வந்தாள்.

பெண்கள் எவ்வளவு தான் திறமைசாலியாக இருந்தாலும் இருளில் நடைபெறுகின்ற நிகழ்வுகளில் மாட்டிக் கொள்கிறார்கள். அப்படித்தான் கருக்காலியும் நேரம் கடந்த நேரத்தில் சீமத்தண்ணி வாங்க கடைக்கு சென்றவன் வீட்டிற்கு வருகின்றபோது பயந்து பயந்து வர வேண்டி இருந்தது. வரும் வழியில் ஒரு ஆண் கருக்காளியை இருளில் துன்புறுத்தினான். அவனிடமிருந்து எப்படியோ தப்பி வந்தாள் என்பதை ஆசிரியர் பெண்கள் இரவு நேரத்தில் தனிமையில் செல்லக்கூடாது என்பதை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றார்.

இருளில் முளைத்த மிருகம் சிறுகதையின் அமைப்பு:

தலித் மக்களுக்கு ஏற்படுத்துகின்ற கொடுமைகளுள் இதுவும் ஒன்று கரிக்காலி என்ற பெண் நல்ல தைரியமான பெண் என்பதால் இரவு நேரங்களில் கூட தனிமையாக வயக்காட்டிற்குச் சென்று வரக்கூடிய எதற்குமே பயப்படாதவள். ஒரு நாள் கயவனிடம் மாட்டிக் கொண்டாள் எவ்வளவு தைரியமாக இருந்தாலும் ஆணாதிக்கம் பிடித்தவர்கள் பெண்களை பலவந்தம் செய்யப்படுகின்றார்கள். அப்படி கரி காளி பலவந்த படுத்தப்பட்டபோது துணிச்சலோடு போராடி தன் மானத்தையும் உயிரையும் காப்பாற்றிக்கொள்ள அந்த இருளில் முளைத்த மிருகத்தை தீர்த்து கட்டினால் என்பது இச்சிறுகதையின் வாயிலாக ஆசிரியர் சித்தரிக்கின்றார்.

கிராமத்தின் நிலை:

குடிகாட்டுச்சேரி என்ற ஒரு ஊர் அந்த ஊரில் சுமார் 40 குடிசை இருக்கும். அந்த ஊரில் கல்தூணின் மேல் நிற்கும் முச்சந்தியில் இருக்கும் லாந்தர் விளக்கு. அந்த விளக்கில் வாரம் ஒருமுறை பஞ்சாயத்து போர்டில் வேலை செய்யும் ஒருவர் வாரம் வாரம் வந்து சீமை தண்ணீர் ஊற்றுவான். அங்கு குப்பைக்கலமுமாய் இருக்கும். சுத்தமாக இருக்காது கிராமத்தில் இருக்கும் நிலையை அகற்ற வேண்டும் என்பதே, இருளில் முளைத்த மிருகம் என்ற கதை உணர்த்தும் கருத்து.

இருள் என்றால் பயமில்லை:

படுநாய்கண் என்கிற ஒரு ஊர்ரில் வாழும் அம்மா மகள் மகளின் பெயர் கரிகாலி அவளுக்கு இருள் என்றால் பயம் இல்லை கரிகாலியின் அம்மா இருட்டில் இருப்பதை பழகப்படுத்தி விட்டால் சிறு குழந்தையிலிருந்து பகல் இரவு என்ற அவளுக்கு பயமே இல்லை கொஞ்ச நாளில் அவளின் தாய் நோய்வாய்ப்பட்டு மரணம் அடைந்தால் அவளின் தாய் இறந்தும் கூட இருட்டு என்றால் அவளுக்கு பயமில்லை கரிகாலியைப் போல் எதற்கும் பயப்படாமல் தைரியமாக பெண்கள் வாழ வேண்டும் என்பதுதான் இக்கதையின் கருத்து.

கரிகாலியின் நம்பிக்கை:

இரவில் முனிப்பாறை ஐய்யனார் கோவில் பக்கத்தில் செக்கிபானை என்ற ஒரு இடம். அந்த இடத்தில் பேய் திரியும். அந்த இடத்திற்கு கூட சென்று வருவாள். ஊகாலான் கோவில் கிணற்றில் கூட குளித்துவிட்டு இரவில் தண்ணீர் எடுத்து வருவாள். அந்த அளவுக்கு தைரியமும் துணிச்சலும் மிக்கவள். கரிகாலி பாம்பு, பூச்சிபொட்டு இதெல்லாம் மறைத்து காப்பாற்றி வருவதே இந்த இருள்தான் என்று கருங்காலி நம்பினாள். இருளை நேசிப்பாள், இரவில் நடமாடுவதை கண்டு வயதான கிழவிகள் ஆச்சரியப்படுவார்கள். அந்த அளவுக்கு இருளை கண்டு பயப்படாமல் நம்பிக்கை வைத்திருந்தாள்.

தாயின் நினைவு :

கோவிந்தன் என்கின்ற ஒருவர் சிறுகடை வைத்திருந்தார். எந்நேரமும் யார் என்ன கேட்டாலும் கொடுப்பார். அந்த கடைக்கு போகும்முன் தன் தாய் சொன்னது நினைவுக்கு வரும். போகும் வழியில் புளியமரம் ஒன்று இருக்கும் அந்தமரத்தை பார்த்தால் அவள் அம்மா நினைவுதான் அவளுக்கு வரும். அவளின் தாய் ஒரு நாள் நல்ல தங்காள் என்கிற கதை சொன்னாள். நினைவுகள் என்பது ஒவ்வொரு வாழ்க்கையிலும் மறக்க முடியாதவை என்பதுதான் இக்கதையின் கருத்து.

கடைகாரரின் பாசம் :

கடைக்காரர் கோவிந்தன் யார் என்ன கேட்டாலும் கொடுப்பார். அந்த கடைக்காரர் என்ன வேண்டும் என்று கேட்டதற்கு எண்ணைய் வாங்க வந்தேன் என்று கூறினார். எவ்வளவுக்கு என்றதும் 50 காசுக்கு ஊத்து என்று கூறினாள். கடையில் யாரும் இல்லாத நேரத்தில் கருங்காலியிடம் பாசமாக விசாரிப்பார் கடைக்காரர். கடைக்காரரின் பாசம் பாசமான வார்த்தைகள் கருங்காலியை மிகவும் நெகிழச் செய்தது என்பதனை உணர்த்துகிறது.

கரிகாலியின் தைரியமும் துணிச்சலும்:

கரிகாலி கடைக்குப் போய் திரும்பி வீட்டுக்கு போகும் நேரத்தில் இருட்டில் பின்னாடியே ஏதோ ஒரு உருவம் வருவதைப் போல் தோன்றியது. அவளும் பயப்படாமல் திரும்பிப் பார்த்தாள். அந்த சமயத்தில் ஒரு ஆண் உருவம். அவள் எப்பொழுதும் பின்புறம் சிறு அருவாள் ஒன்று வைத்திருப்பாள். யாரும் இந்த இருட்டில் வரமாட்டார்கள் என்று யோசித்தாள். திடீர் என்று ஒரு உருவம் அவள் மேலே பாய்ந்ததுபோல் இருந்தது யார்? யார்? என்று கேட்டாள். அவளின் கை, கால் போர்த்தி வைக்கோலின் மேல் தள்ளிவிட்டான். முகம் தெரியாத அவனை சட்டையை கிழித்தாள். அவள் பயப்படாமல் முகத்தை பிராண்டினாள். அவள் அவனின் தலையை அழுத்தினாள். அப்போது தான் தாய் ஞாபகம் வந்து கண்ணீர் பெருகியது. இருளில் முளைத்த மிருகம் போல் அவள் இயங்கி கொண்டிருந்தாள். இன்னைக்கு செத்தடா நாயே என்று நினைத்துக் கொண்டு பண்ணை அருவாளை உருவி முதுகின் முனையால் அறிந்தால் அவனின் பிடி விளகியது. அவளின் கழுத்தை பிடித்தால் கருங்காலி குறி வழுக்கி விழுந்தது. கருங்காளியின் துணிச்சலும், தைரியமும் பெண்களுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும் என்பதே இக்கதையின் கருத்து நன்கு உணர்த்துவதை நாம் அறிவோம்.

இருட்டை வெறுத்தால் :

அவளிடம் இருந்து தன்னை காப்பாற்றிக் கொள்ள நெடுநீரும் போராடினால் அதன் பிறகு அவள் வைக்கோலில் கிடந்த தாவணியை எடுத்து மார்பில் போட்டு கொண்டு வீட்டிற்கு வேகமாக ஓடினாள் அவளும் வீட்டிற்கு வந்துவிட்டால் அவளுக்கு நெஞ்சம் படபடத்தது வைக்கோல் இடம் கேட்ட சத்தம் நடந்த விபரீதங்கள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கியது கருங்காலிக்கு தாயின் நினைவு வந்தது முதல் முதலாக குடிசைக்குள் இருளை வெறுத்தபடி நிலை குத்தினாள் அவள் முதல் முதலாக இருட்டை வெறுக்க தொடங்கினாள் இருளில் முளைத்த மிருகத்தினால் இருளை வெறுத்தால் என்பதே இக்கதையின் கருத்து.

தன் கையே தனக்கு உதவி :

இக்கதையில் கருங்காலி ஒரு தைரியமான பெண் துணிச்சல் ஆனவள் என்பதை உணர்த்துகிறது எக்காரணத்திற்காகவும் ஆண்களும் பெண்களும் தன்னம்பிக்கையை கைவிடக் கூடாது எந்த சூழ்நிலையிலும் தைரியமாக இருக்க வேண்டும் இக்கதையில் வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு பழமொழி தான் தன் கையே தனக்கு உதவி அவளையும் கருப்பையும் காப்பாற்றிக் கொள்ளும் தைரியமும் அவளிடம் இருந்தது இருட்டைக் கண்டு அஞ்சாமல் அவள் போராடிய அந்த தைரியமான துணிச்சல் பிறரிடம் குறிப்பாக பெண்களிடம் இருக்க வேண்டும் என்பதே இக்கதை உணர்த்துகிறது.

இருளில் முளைத்த மிருகம் கதாபாத்திரங்கள்

முதன்மை பாத்திரம் :

1.கரிக்காலி

துணைமை பாத்திரங்கள் :

1.சுந்தரம்கிழவி

2.கூனக் கோவிந்தன்

கரிகாலியின் பண்பு நலன்கள் :

இறுகிய பாறையின் ஊடே இறங்கி பிறக்கும் வேரென பரவுகிறது கோபம்

அறிவின் நீள் சமவெளி எங்கும் அடைக்கப்பட்ட ஊற்றுக் கண்களில் கசிகின்றது இருள்

மடமை சுமைகளை ஏற்றி யேற்றி நீள்கிறது மூடநம்பிக்கையின் கம்பி மதத்தின் போதை கண்களை மறைக்க அரங்கேறுகின்றன பிரார்த்தனை பயங்கரங்கள் ஒளியை உறிஞ்சி கருத்த இரவு மரங்களாய் கிடக்கின்றன மூட மனிதர்கள் பகுத்தறிவின் பாதைகளைத் தூர்க்கும் பக்தி மாயைகளை விரட்டித் துரத்த தேவை அம்பேத்கரின் ஒரு துளி மையோ பெரியாரின் கைத்தடி நுனியோ 7

கரிகாலி தாய் தந்தை இல்லாத ஒரு பெண். சிறு வயதிலே அம்மாவையும், தன்னையும் விட்டுவிட்டு எங்கோ சென்று விட்ட அப்பா. அம்மா அப்பாவை தேடாத இடம் இல்லை. எங்கு தேடியும் கிடைக்கவில்லை. இறுதியில் மகள் கரிகாலியை தான் தான் வளர்க்க வேண்டும் என்று மகளுக்கு தேவையான அனைத்தும் சொல்லிக் கொடுத்து வளர்த்தாள் தாய்.

தாயின் சொல் படியே கேட்டு கரிகாலியும் நன்றாகவே வளர்ந்து வந்தால் தாய்க்கு உடல்நிலை சரியில்லாமல் இறந்து விடுவாள் என்ற செய்தியை கேட்டு கரி காளி மிகுந்த வருத்தம் அடைந்தால் எங்கெங்கோ சென்று மருத்துவம் பார்த்தால் பயன் இல்லை என்று மருத்துவர்கள் கைவிரித்து விட்டார்கள் வீட்டு திண்ணையிலே அவள் உயிர் பிரிந்தது அதன் பிறகு தனிமையில் வாழ பழகிக் கொண்டால் கரிகாலி.

ஒரு நாள் வேலைக்கு சென்று வந்ததற்குள் இரவு நேரமாகிவிட்டது. இரவு என்பது இவளுக்கு புதியது இல்லை. இருந்தாலும் பெண் என்பதால் மனக்கலக்கம் இருந்தது. இருந்தும்வீட்டிற்கு வந்துவிட்டாள். வீட்டிற்கு வந்து சிம்னியை எடுத்து விளக்கேற்ற நினைத்தால் சிம்னியில் சீமதண்ணீர் இல்லை என்பதால் கடைக்கு சென்று வாங்கச் சென்றாள். 11 மணி இருக்கும் இருள் சூழ்ந்து காணப்பட்டது. சீமதண்ணீர் வாங்கிக் கொண்டு சிம்னியை ஏற்றிக் கொண்டு வேகமாக நடைக் கட்டினாள். வைக்கோல் மடிப்புகளின் வழியாக சென்று விரைவாக சேரிக்குள் நுழைந்து விடலாம் என்று நினைத்தாள். அதற்குள்ளாக இருளில் ஒரு உருவம் ஓடி ஒளிவது தெரிந்தது. அவள் திரும்பி பார்த்தால் யாரும் இல்லை. சிறிது நேரத்திற்குள் மீண்டும் சலசலப்பு கேட்டது. மீண்டும் திரும்பி பார்த்தாள். இருளில் அதே உருவம் மறைந்து இருந்தது. யாரது என்று குரல் விட்டாள். எந்த பதிலும் இல்லை. சரி விரைவாக நாம் சென்றுவிட வேண்டும் என்று நினைத்தாள்.

> **"பின்னாலிருந்து ஒரு உருவம் ஓடிவரும் காலடியோசை கேட்டது. இரண்டு அடி வைத்திருப்பாள். உடம்போடு மோதிய உருவம், இடது கையால் கரிக்காலியின் வாயைப் பொத்திக் கொண்டு, உடலை செந்துதூக்காகத் தூக்கியது. சிம்னியைப் போட்டுவிட்டு, வாயைப் பொத்தியிருக்கும் கையை கீழே இழுத்துத்தள்ள முயற்சித்தாள். கால்களை உதைத்தாள். தடிமனான ஒரு ஆண் முண்டம் போலிருந்த அந்த உருவம் கரிக்காலியின் உடலைத் தூக்கிக்கொண்டு மந்தைப் பாதையிறங்கி கைக்கோல் படப்பு ஒன்றின் மேல் சாத்தியது". 7**

இருளில் நடைபெறும் அவலத்தை எடுத்துக்கூறுகிறார்

'இருளிலிருந்து முளைத்து வந்த மிருகம் போல் அவன் இயங்கிக் கொண்டிருந்தான். கரிக்காலியின் ஒல்லியான உடம்பின் மீது மலையாய் சரிந்து அழுத்தினான். மரக் கட்டையொன்று உடம்புக்கூட்டுக்குள் சொறுகி இறங்கியது. உடம்புக்குள்ளிருந்த காற்று வாய் வழியே மூக்கு வழியேவெளியேறி முட்டியது. எலும்புகள் கொண்டிருந்தன. வைக்கோலைத் துளைத்து, பின் இருப்பில்

சொறுகியிருந்த பண்ணையரிவாளை உருவின வேகத்தில், அவன் முதுகில் முனையால் அறுத்தாள். நெடு முதுகில் நீண்ட கோடு கிழித்து வயிற்றுப் பக்கம் இறங்கியது அரிவாள்.” 8

ஆசிரியர் பெண்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். இருளில் ஏற்படும் துன்பத்தை

'அலறிக்கொண்டு எழுந்தான் அவன். பிடி விலகியதும் கொத்தும் நாகமாய் எழும்பி மண்டியிட்டுக் கொண்டே அவன் கழுத்தைப் பிடித்தாள் கரிக்காலி. சுதாரித்து நிமிர்ந்து விலக்கினான். உடம்பு வழியே வழுக்கிய கையில் விரைத்து நின்ற குறி சிக்கியது. கோர்த்து அறுத்தாள். அறுப்பட்ட குறி வழுக்கிக் காண்டு விழுந்து தொலைந்தது. துள்ளி விழுந்து பெருங்குரலெடுத்து அலறினான் அவன். இருளைக் கிழித்துக் கொண்டு பரவியது அவனது அலறல்.”9

என்று இருளின் புரியவைத்திருக்ககிறார். நிலையை ஆசிரியர் மக்களுக்கு

எவ்வளவுதான் தைரியமான பெண்ணாக இருந்தாலும் இருளில் நிகழக்கூடிய சம்பவங்களில் இருந்து தப்பிக்க நேரத்தோடு வீட்டுற்கு செல்ல வேண்டும். கரிக்காலியைப் போல் எல்ல பெண்களும் துணிச்சலாக போராட முடியுமா? அதோடு ஆதிக்க காதியின் கொடுமையால் மாட்டிக்கொள்வது என்பதை ஆசிரியர் கரிக்காலியின் பண்பு நலன்களை எடுத்துக் காட்டி இருக்கிறார்.

சுந்தரம் கிழவி பண்பு நலன்கள் :

இவள் கரிக்காலிக்கு பக்கத்து வீட்டுக்காரி. கரிக்காலி வீட்டில் இருக்கும் போது உன் ஆத்தா உன்னை இப்படி வளர்த்தா, அப்படி வளத்தா என்று ஆத்தாவைப் பற்றி பேசிக்கொண்டு இருப்பாள். மேலும் உன்னை ஒருத்தன் கையில் பிடித்து கொடுக்காம போயிட்டாலே என்று வருத்தப்பட்டால் சுந்தரம் கிழவி. கரிக்காலி இல்லாத நேரங்களில் வீட்டை பார்த்துக் கொள்வது சுந்தரம் கிழவிதான்.

கூனக் கோவிந்தன் பண்பு நலன்கள் :

குடிக்காட்டில் மளிகை கடை வைத்து இருப்பவர் கூனக் கோயிந்தன். இவர் இந்த ஊர் மக்கள் மீது மிகுந்த அன்பு கொண்டு இருந்தான். யாரும் எந்த குறைகளையும் சொல்லாத அளவுக்கு நடந்து கொண்டு இருக்கிறார். ஊர் மக்களுக்கு கடன் கொடுப்பது கடன் வாங்குவது மேலும் நெருங்கி பழகியவர்களுக்கு சில நேரங்களில் உதவி செய்வது போன்ற நல்ல பணிகளையேச் செய்து வந்தார்.

“பக்கத்து ஊரான சோமியா புரத்திலிருந்து வந்து அந்த மந்தையில் கடைபோட்டு இருபத்தைந்து வருடமாகிவிட்டது. குடிக் காட்டில் தள்ளிக்கோ என்று யாரும் சொல்லாதபடி கடை நடத்தினார் கோயிந்தன். சேரியில் உள்ள பொண்டு பொடுசுகள், கையில் மிஞ்சும் காசை கொடுத்து வைத்து வாங்கிக் கொள்ளும் அளவிற்கு நம்பிக்கையான பிழைப்பு நடத்தினார் கோயிந்தன்."10 என கூறுவது நோக்கத்தக்கது ஆகும்.

முடிவுரை:

ஒரு நாட்டின் நான்கு பக்கமும் நால்வகைப் போரினால் சூழ்ந்து கொண்டாலும், அந்நாட்டினைக் காப்பாற்ற பல்வேறு முயற்சி மேற்கொண்டு வெற்றி பெறுபவனே சிறந்த அரசனாக விளங்குகிறான். இவற்றைப் போன்று ஒரு பெண் நான்கு பக்கமும் முற்றுகையிடப்பட்டிருந்தாலும் அவளின் சூழ்நிலைக்கு ஏற்றவாறும் மனித சமுதாயத்தின் இயல்பான வாழ்க்கைக்கு ஏற்றவாறும் அவளின் வாழ்க்கையை அமைத்துக் கொள்பவளே சிறந்த பெண்ணாக அமைகிறாள் என்ற கருத்துக்கு ஏற்ப இருளில் முளைத்த மிருகம் கதையில் கரிகாலிக்கு ஏற்பட்ட கொடுமைகள் வேறுயாருக்கும் ஏற்படக்கூடாது என ஆசிரியர் வலியுறுத்தியுள்ளார். மேலும், தனிமையில் வாழ்கின்ற பெண்கள் எப்படி கரிகாலியைப் போல் தைரியமாகவும் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் வாழக்கூடியவர்களாக இருக்க வேண்டும் எனவும் மிருகங்களாக திரியும் ஆதிக்க சாதியினரின் கொடுமைகளை எப்படி எதிர்கொள்வது என்பது பற்றி ஆராயப்பட்டுள்ளது.

துணைநூற் பட்டியல்

1.யாக்கன் - இருளில் முளைத்த மிருகம் கலகம் வெளியீட்டகம்,1/7 அப்பாவு தெரு எல்லிசு சாலை சென்னை -02, முதற்பதிப்பு ஜூன் 2010 விலை ₹50.

2. வெங்கட்ராமன் கா. கோ- தமிழ் இலக்கிய வரலாறு கலையக வெளியிடு, நாமக்கல் மாவட்டம்.

References:

1.Yaakkan - Irulil mulaiththa Mirugam kalagam veliyeettakam,1/7 appavu theru ellisu salai chennai -02, mutharpathippu june 2010 vilai ₹50.

2. Vengkatraaman kaa. koo- Thamizh ilakkiya varalaaru kalaiyaga veliyidu, namakkal maavattam.

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com